IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. சிசி 6 of 2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw1 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | சுலோச்சனா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.06.2022

நான் சென்னையில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டில் இருந்து வருகிறேன். எதிரிகளை தெரியும். 26.02.2007 ம் தேதி எனக்கும் 1 வது எதிரிக்கும் வெற்றிலையூரணி ஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது எனக்கு 70 பவுன் நகையும் ரூ5 லட்சம் ரொக்கமும் கொடுத்தார்கள். திருமணத்திற்கு பின்பு வெற்றிலையூரணியில் வாழ்ந்து வந்தோம். எனக்கு கார்த்திக்ராஜா என்ற ஆண் குழந்தை பிறந்தது. இந்நிலையில் கடந்த 09.08.2015 ம் தேதி குடும்ப கருத்து வேறுபாடு காரணமாக நேரம் சரியில்லை என்று சொல்லி என்னையும் எனது மகனையும் சென்னைக்கு தனியாக அனுப்பி

வைத்தார்கள். 1ம் எதிரி எனக்கு சென்னையில் இருக்கும்போது போன் செய்யவில்லை. எனது மகனுக்கு எந்த செலவும் செய்யவில்லை. சென்னை பூந்தமல்லி நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கேட்டு 16.04.2019ம் தேதி மனு தாக்கல் செய்தேன். 1ம் எதிரி தற்போது வரை ஆஜராகவில்லை. நாங்கள் சென்னையில் இருக்கும்போது 1ம் எதிரிக்கும் மகாலட்சுமி என்பவருக்கும் எனது கணவரின் குடும்பத்தார்கள் 2வது திருமணம் 06.06.2019ம் தேதி செய்து வைத்தார்கள். நாங்கள் சென்னயைில் இருக்கும்போது 1ம எதிரி 2ம் திருமணம் செய்த விபரத்தை எனது உறவினர் வேண்டாராஜா என்பவர் தகவல் சொன்னார். 08.06.2019ம் தேதி சென்னையில் இருந்து கிளம்பி 09.06.2019ம் தேதி காலையில் வெற்றிலையூரணியில் உள்ள எனது கணவர் வீட்டிற்கு நானும் எனது மகனும் போனோம். எனது கணவரின் வீடு பூட்டியிருந்தது. பின்னர் நானும் எனது மகனும் வலையப்பட்டியில் உள்ள எனது அம்மா வீட்டிற்கு போய்விட்டோம். 10.06.2019ம் தேதி காலை சுமார் 11 மணிக்கு நானும் எனது மகன் மற்றும் பாலசுப்பிரமணியன், வேண்டாராஜா ஆகியோர்கள் வெற்றிலையூரணியில் உள்ள எனது கணவர் வீட்டிற்கு சென்றோம். அங்கு எதிரிகள் அனைவரும் இருந்தார்கள். நான் எனது கணவரிடம் நியாயம் கேட்டபோது கூடுதலாக 50 பவுன் நகையும் 5 லட்ச ரூபாயும் கூடுதலாக நீ கொடுக்காததால் நான் வேறொரு திருமணம் செய்துவிட்டதாக எனது கணவர் என்னிடம் கூறினார். அப்போது என் கணவர் என்னை பார்த்தபோது ஏன் தேவடியா இங்கு ஏன் வந்தாய் இ்ங்கிருந்து போய்விடு இல்லைஎன்றால் கொலை செய்து விடுவோம் என்று மிரட்டினார். மற்ற எதிரிகள் அனைவரும் என்னை பார்த்து நீ ஏன் தேவடியா இங்க வந்தாய் நாங்கள் கேட்ட பணமும் நகையும ்கொடுக்காததால் உனது கணவருக்கு வேறொரு திருமணம் செய்து வைத்ேதாம் என்று கூறினார்கள். விவாகரத்து மனுவை எனது கணவர் சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கினை நான் சென்னை பூந்தமல்லிக்கு நீதிமன்றத்தில் மனு செய்து மாற்றினேன். சிவகாசியில் இருக்கும்போது விவாகரத்து மனுவானது 13.11.2018ம் தேதி ஒருதலைபட்சமாக எனக்கு எதிராக தீர்ப்பானது. அந்த ஒருதலைபட்ச உத்தரவு கடந்த 23.04.2019ம் தேதி சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் நீக்கறவு செய்யப்பட்டு அந்த வழக்கினை நான் பூந்தமல்லி நீதிமன்றத்திற்கு மாற்றினேன். நான் தொடர்ந்து பூந்தமல்லி நீதிமன்றத்தில்

நான் ஆஜர் ஆனேன். 1ம் எதிரி தொடர்ந்து பூந்தமல்லி சார்பு நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாததால் 07.04.2022ம் தேதி அந்த 1ம் எதிரி கொடுத்த விவாகரத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. பூந்தமல்லி நீதிமன்றத்தில் எச்எம்ஓபி 791/2019 ஆக 07.04.2022ம் தேதி வழங்கப்பட்ட தீர்ப்பும் தீர்ப்பாணையும் அ.சா.ஆ–1 ஆகும். 10.06.2019ம் தேதி சாத்தூர் அனைத்து மகளிர் கா.நி.ல் 1ம் எதிரி 2ம் திருமணம் செய்ததற்காக புகார் மனு கொடுத்தேன். போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை. 12.06.2019ம் தேதி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு கொடுத்தேன். ரசீது கொடுத்தார்கள். அப்போதும் போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை. அதன்பின்னர் நீதிமன்றம் மூலமாக குவிமுச பிரிவு 156(3) படி மனு செய்து உத்தரவு பெற்று போலீசார் வழக்கு பதிவு செய்தார்கள். எனக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட ரசீது அ.சா.ஆ.2 ஆகும். குவிமுச பிரிவு 156(3) படியான மனு மற்றும் கோப்புகள் அ.சா.ஆ–3 ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் கு.வி ஒத்திவைக்கப்படுகிறது.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. சிசி 6 of 2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw2 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | கார்த்திக்ராஜா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

13.06.2022

நீதிமன்ற கேள்விகள்
உங்கள் பெயர் என்ன?
கார்த்திக்ராஜா
உங்கள் வயது என்ன?
15 வயது
எந்த ஊரில் குடியிருக்கிறீர்கள்?
தற்போது சென்னையில் உள்ளோம்.
நீங்கள் எங்கு வந்துள்ளீர்கள்?
கோர்ட்
உங்கள் தகப்பனார் பெயர் என்ன?
முகேநாத்சாய்ராம்
சாட்சி நீதிமன்ற கேள்விகளுக்கு புரிந்து கொண்டு பதில் அளித்ததால் செய்யப்பட்ட

முதல்விசாரணை

நான் சென்னையில் குடியிருந்து வருகிறேன். நான் 10ம் வகுப்பு படித்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா. ஆஜர் எதிரிகளைத் தெரியும். 1ம் எதிரி எனது அப்பா. நான் எஸ்கேடிஜெ மேல்நிலைப்பள்ளியில் தற்போது 10 வகுப்பு படித்து வருகிறேன். 9ம் வகுப்பு படிக்கும்போது எனது அப்பா 1ம் எதிரி 06.06.2019ம் தேதி என் தாயாரிடமிருந்து விவாகரத்து பெறாமல் மகாலட்சுமி என்பவரை 2வது திருமணம் செய்துகொண்டதாக எங்களது உறவினர் வேண்டாராஜா தாத்தா கூறினார். 08.06.2019ம் தேதி நானும் எனது அம்மாவும் சென்னையில் இருந்து கிளம்பி 09.06.2019ம் தேதி வெற்றிலையூரணியில் உள்ள எனது அப்பா வீட்டிற்கு நானும் எனது அம்மாவும் சென்றோம். வீடு பூட்டியிருந்தது. அதன்பின்னர் நானும் எனது அம்மாவும் எனது அம்மாவின் சொந்த ஊரான வலையப்பட்டி என்ற கிராமத்திற்கு சென்றுவிட்டோம். 10.06.2019ம் தேதி காலை 11 மணிக்கு வெற்றிலையூரணியில் உளள் எனது அப்பா வீட்டிற்கு நானும் எனது அம்மா, பாலசுப்பிரமணியன் தாத்தா, வேண்டாராஜா தாத்தா ஆகியோர்கள் சென்றோம். எனது அம்மா 1ம் எதிரியான எனது அப்பாவை பார்த்து எப்படி என்னை டைவர்ஸ் செய்யாமல் 2வது திருமணம் செய்யலாம் என்று கேட்டார். அதற்கு எனது அப்பா எனது அம்மாவிடம் நீ 50 பவுன் நகையும், 5லட்சம் ரூபாயும் நீ தராததால் நான் 2வது திருமணம் செய்துகொண்டேன் என்று சொன்னார். முதல் பெரியப்பா எதிரி திருலோகசந்திரன், அவரது மனைவியான எனது பெரியம்மா யமுனாதேவி, 2வது பெரியப்பாவான முத்துமாரியப்பன், அவரது மனைவியான எனது பெரியம்மா மனோன்மணி ஆகியோரிடம் எனது அம்மா கேட்டதற்கு நீ 50 பவுன் நகையும் 5லட்சம் ரூபாயும் தராததால் உனது கணவருக்கு நாங்கள் 2வது திருமணம் செய்து வைத்தோம் என்று சொன்னார்கள். எனது அப்பாவை பார்த்து எனது அம்மா இப்படி செய்ததது தவறு தானே என்று கேட்டார். அதற்கு எனது அப்பா எனது அம்மாவை அடியே தேவடியா இங்கு ஏன் வந்தாய் போகவில்லை என்றால் உன்னை கொலை பண்ணிவிடுவேன் என்று மிரட்டினார். அதற்கு எனது அம்மா மனது உடைந்து போய் வீட்டில் தூக்கு போடும் அளவிற்கு போய்விட்டார். அங்கிருந்த எனது பாலசுப்பிரமணியன் தாத்தா மற்றும் முத்துகுமார் மாமா ஆகியோர்கள் எனது அம்மாவை காப்பாற்றி, சமாதானபடுத்தி அறிவுரை கூறினார்கள். அதன்பின்னர்

நாங்கள் சென்னை சென்றுவிட்டோம். இது சம்பந்தமாக எனது அம்மா புகார் கொடுத்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் கு.வி ஒத்திவைக்கப்படுகிறது.